பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 23 புதன்கிழமை 08.09.2021 கதிர் 171

## மேலும் 674 பேர் சிக்கினார்கள்!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியமை தொடர்பாக நேற்று 674 பேர் கைது செய்யப்பட்டமையுடன் 42 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. ☞2

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஒத்திவைப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இம்மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி தற்போதைய கொரோனா பெருந்தொற்று நிலைமைகளைக் கருத்தில்கொண்டு அடுத்த மாதம் 7,8,9ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ☞2

## பிக்கப் - டிப்பர் நேருக்கு நேர் மோதல்; கனகராயன்குளத்தில் இருவர் சாவு!



(வவுனியா நிருபர்)

வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் பிக்கப் வாகனமும் டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் ☞2

# தமிழரசு பாரம்பரியத்தில் வந்தவன் நான்; 'ஸேம் சைட்' கோலடிக்கும் தேவை கிடையாது

## வடக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. விளாசல்

(இ.கலையமுதன்)

**நான் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்தவன். 'ஸேம் சைட்' கோலடிக்கும் தேவை எனக்குக் கிடையாது.**

**இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.**

**இன்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**எது நியாயமோ எது சரியோ அதை யார் செய்தாலும் நான் சரி என்பேன். அதே பிழை என்றால் பிழை என்று கூறுவது என்னுடைய பொறுப்பு. இனி நான் பயப்படமாட்டேன்.** ☞2



## நாளை யாழ். வருகின்றார் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

(இ.கலையமுதன்)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நாளை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான கண்காணிப்பு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசின் அனுசரணையில் யாழில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் ☞2



## வவுனியா வைத்தியசாலையில் தேங்கிக் கிடக்கும் 20 சடலங்கள்

### மாவட்டத்தில் கொரோனா கோரத்தாண்டவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 20 கொரோனா சடலங்கள் தேங்கியுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதுடன், இறப்புக்களும் அதிகரித்து வருகின்றன. தொற்று காரணமாக மரணமடைபவர்களின் உடல்கள் சுகாதார நடைமுறைகளுடன் வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த மின் மயானத்தில் நாள் ஒன்றுக்கு 6 சடலங்களையே தகனம் செய்யக் கூடியதாகவுள்ளது. ஆனால், தற்போது வவுனியாவில் இறப்புக்கள் அதிகரித்து வருவதால் சடலங்களை உடனடியாகத் தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களில் மரணமடைந்த 20 பேரின் சடலங்கள் தற்போது தகனம் செய்யப்படாத நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த சடலங்களை முழுமையாகத் ☞2

## இந்திய இராணுவக் குழுவினர் இலங்கைக்குத் திடீர் பயணம்

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய பேச்சு நடத்துவதற்காக இந்திய இராணுவத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்தூதரகம் விடுத்துள்ள டுவிட்டர் செய்தியில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு ரீதியிலான பேச்சு, பயிற்சி முகாம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய விடயங்களுக்காக இந்தக் குழு விஜயம் செய்திருக்கின்றது ☞2



## வவு. விபத்தில் மரணமடைந்த இளைஞருக்குக் கொரோனா!



(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈரப்பெரியகுளம் விபத்தில் மரணமடைந்த 28 வயது இளைஞருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ☞2

## 1,000 சமைத்த உணவுப் பொதிகள்

தாவுதி போகாராஸ் என்ற முஸ்லிம் அமைப்பால் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு வழங்கவென ஆயிரம் சமைத்த உணவுப் பொதிகள் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் இன்று கையளிக்கப்பட்டன. ☞2



### வைரஸ் திரிவுகள் பரவுவதால்

## கர்ப்பமடைவதைத் தாமதப்படுத்த மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை

கொரோனா, டெல்டா வைரஸ் திரிவுகள் பரவுவதால் பெண்கள் தாங்கள் கர்ப்பம் தரிப்பதை ஒரு வருடம் தாமதப்படுத்துமாறு சுகாதாரப் பிரிவுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. ☞2

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

299 பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு மேல் மாகாண எல்லையில் 13 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் பொதுமுடக்கத்தை மீறிப் பயணித்த 1,357 பேருடன் 883 வாகனங்கள் திருப்பியனுப்பப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியவர்கள் தொடர்பாக நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இதுவரை 67 ஆயிரத்து 342 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, கடந்த மாதம் 20ஆம் திகதி பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 11 ஆயிரத்து 137 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதே வேளை, 1,321 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## நாளை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணித்து அவற்றைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரது யாழ். விஜயம் அமையவுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், அமைச்சரின் வருகையை முன்னிட்டு எவ்வித விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்று அவரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகளை அரசு தடையின்றி முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## 1,000 சமைத்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரி வீதி பள்ளிவாசல் நிர்வாகத்தினர் ஏற்பாட்டில் போரால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் 19 நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கவென வெளிநாட்டில் உள்ள மற்றும் யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் முஸ்லிம் மக்களின் நிதிப் பங்களிப்பில் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் சமைத்த உணவுப் பொதிகள் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் கையளிக்கப்பட்டன.

உணவுப் பொதி கையளிக்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் முரளிதரன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சுதர்சன், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் முஸ்லிம் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வவுனியா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகனம் செய்ய மூன்று தினங்கள் தேவையாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் இறப்புக்கள் ஏற்பட்டால் தகனம் செய்வதில் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடன் தொற்றில் இருந்து விடுபட சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன், அரசினதும், சுகாதாரப் பிரிவினரதும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (100)

## இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப்பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப்பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்தச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழு இன்று காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 07ஆம் திகதி முதல் 09 திகதி வரை யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்துவது எனத் தீர்மானித்துள்ளது.

எனினும், சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழாவைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கர்ப்பமடைவதைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெல்டா திரிபு பரவுவதால், தாய் மற்றும் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மகளிர் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஹர்ஷா அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

## பிக்கப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இருந்து ஏ - 9 வீதி ஊடாக பயணித்த பிக்கப் வாகனமும் வவுனியா நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் கனகராயன்குளம் சந்திக்கு அண்மையில் கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் இருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

மரணமடைந்த மற்றும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து கனகராயன்குளம் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## வவு. விபத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் கடற்படை பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் 28 வயதான இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமடைந்திருந்தார்.

குறித்த இளைஞரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதன் முடிவுகளின் பிரகாரம் அவருக்குக் கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அவரது சடலத்தினை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யும் செயற்பாட்டை சுகாதாரத் தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். (100)





## தமிழரசு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை நான் அடக்கி வாசித்தேன். என் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள்.

ஒரு சிலரை தாக்குவதாக நினைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சியைத் தாக்குகின்றனர். தமிழரசுக்கட்சியை ஓரங்கட்ட நினைப்பது பகல் கனவு. எந்தக் கொம்பனாலும் அதனை அழிக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பங்காளிக்கட்சிகள் போகப்போகின்றோம் என முடிவெடுத்தால் அதை நாங்கள் தடுக்க முடியாது. ஆனால், அவர்கள் அவ்வாறான ஒரு முடிவை எடுக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகின்றேன் - என்றார்.

தமிழரசுக் கட்சி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் எழுதியது தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பியபோது,

என்னைப் பொறுத்தவரையில் ஊடகச் செய்திகளைப் பார்க்கும்போது சில செய்திகளில் உண்மை இல்லை என்றே தெரிகின்றது.

விடுதலைப்புலிகள் மீதும் விசாரணையை வலியுறுத்தும் ஒரு கடிதத்தை எனக்குத் தெரிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தமிழரசுக் கட்சி சார்ந்து அனுப்பியதாக இல்லை. அதை மட்டும் என்னால் உறுதியாகக் கூற முடியும். அவ்வாறு எழுதினால் நான் அதனை வெளிப்படுத்துவேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே, அது உடைந்து போவதை நான் தனிப்பட்ட முறையில் விரும்பமாட்டேன்.- என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புத்திசாதுரியமற்ற செயல்

கொரோனாப் பேரிடரை எதிர்கொள்வது தொடர்பில் மருத்துவ – சுகாதார அதிகாரிகளும் நிபுணர்களும் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதுண்டு.

அது, பேரிடரை எதிர்கொள்வது மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை விஞ்ஞான ரீதியாக முன்னெடுக்க வேண்டும், அரசியல் ரீதியான நலன், வசதிகளின் அடிப்படையில் அல்ல, அல்லது இராணுவ ரீதியிலான கடும்போக்கிலும் அல்ல.

ஆனால், அரசு இந்த ஆலோசனைகளைச் செவிமடுப்பதில்லை என்ற குறைபாடு வலுவாக உள்ளது. கொரோனாத் தடுப்பு தொடர்பான பல விடயங்களையும் அரசு ஒன்றில் அரசியல் நோக்கில் அணுகுகிறது அல்லது ஜனாதிபதியின் இராணுவக் குழுமத்தின் சிந்தனையில் முன்னெடுக்கின்றது. அந்த வகையில் அரசின் மீது மருத்துவ நிபுணர்களின் சங்கத் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ ஒரு கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

அம்பாந்தோட்டை பகுதியில் 20 முதல் 30 வயதுக் குட்பட்டோருக்கு அமெரிக்கத் தயாரிப்பான தடுப்பூசியை செலுத்த எடுத்த முடிவு புத்திபூர்வமற்றது. விஞ்ஞான ரீதியான கருத்தியலுக்கு பொருந்தியே வராதது என்று அவர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

தொற்றாபத்து அதிகம் உள்ளவர்களுக்குத்தான் தடுப்பூசி வழங்கலில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில் பார்த்தால் 60 வயதிற்கு மேற்பட்டோர்தான் இந்த ரகத்தில் முக்கியமானவர்கள். இரண்டாவது டோஸ் தடுப்பூசி பெற்ற பின்னரும் உயிரிழந்தவர்கள் அல்லது அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்களை ஆக்கிரமித்து இருப்பவர்களில் அதிகமானோர் இப்படி 60 வயதுக்கு மேற்பட்டோரும், பல்வேறு பிற உபாதைகள். நோய்கள் கொண்டவர்களும்தான் என்பதை சுட்டிக் காட்டுகிறார் அவர்.

அறுபது வயதுக்கு மேற்பட்டோரின் விடயத்தில் இரண்டு அம்சங்கள் இப்போது அவதானிக்கப்பட்டுள்ளன.

இரண்டு டோஸ் தடுப்பூசிகளை உரிய கால இடைவெளியில் பெற்றாலும் கூட அவர்களில் போதியளவு பிறபொருளெதிரிகள் அல்லது நீர்ப்பீடனம் உருவாகவில்லை. அதனால் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னரும் அந்த வைரஸின் மோசமான தாக்குதலில் அவர்கள் இறக்கின்றனர். அதனால் அவர்களுக்கு இப்போது மூன்றாவது டோஸும் கொடுப்பது குறித்து சிந்திக்கப் படுகின்றது.

அடுத்த விடயம் இப்போது நாட்டில் தாராளமாகக் கிடைப்பவை சீனத் தயாரிப்பான சினோபோர்ம் தடுப்பூசிகள்தான். அஸ்ட்ரா ஜெனெக்கா, பைஸர், மொடேர்னா தடுப்பூசிகள் போதிய எண்ணிக்கையில் கிடைப்பதில்லை. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவை கிடைக்கின்றன. ஆனால் அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு, சினோபோர்ம் தடுப்பூசிகளுடன் ஒப்பிடுகையில் இந்தவகை – அஸ்ட்ரா ஜெனெக்கா, பைஸர், மொடேர்னா வகை – தடுப்பூசி ஏற்றப்பட்ட பின்னர் உடலில் கூடியளவு எதிர்ப்பு சக்தி உருவாவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வயது பிரிவினருக்கு – அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது – பூஸ்டர் – டோஸ் செலுத்துவதாயின் பைஸர் போன்றவற்றை ஏற்றுவதே பொருத்தமானதாக இருக்கும். இருபது – முப்பது வயதுப் பிரிவினருக்கு இயல்பாகவே எதிர்ப்பு சக்தி உருவாகும் வாய்ப்பு அதிகம் இருப்பதால் அவர்களுக்கு சினோபோர்ம் செலுத்தலாம்.

அதைவிடுத்து, மட்டுப்படுத்தப்பட்ட அளவு கிடைத்துள்ள பைஸர் தடுப்பூசியை அந்த இளம் வயதினருக்கு செலுத்துவது புத்திசாதுரியமற்ற செயல் தான். அது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதும் கூட வெளிப்படையானதுதான்.

# பி.சி.ஆர். சோதனைகள் குறைக்கப்பட்டுள்ளன!

## உபுல் றோஹண தெரிவிப்பு

**பி.சி.ஆர். மற்றும் விரைவான அன்டிஜன் சோதனை மேற்கொள்வது குறைக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக, நாளாந்தம் அறிக்கையிடப்பட்ட தொற்றுநோய்களின் அடிப்படையில் சமூகத்தின் கொவிட் தொற்றின் பரவலை மதிப்பிட முடியாதுஎன்றுஅவர் சுட்டிக்காட்டுகிறார்.

அறிகுறிகள் மற்றும் முதல் இணைப்புகளைக் கொண்ட நபர்களைச் சோதனை செய்வதை கட்டுப்படுத்தும் வகையில் சுகாதாரச் சேவை இயக்குநர் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கு மட்டுமே சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், சமூகத்தில் பல மடங்கு நோய்த்தொற்றுகள் பதிவாகலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், அதிகார பூர்வ புள்ளிவிவரங்களால் மட்டும் கொவிட் தொற்று நோய் பரவுவதற்கான சரியான மதிப் பீட்டை வழங்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீட்டிலுள்ள தொற்றுக்கு உள்ளான குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பு

கடுமையான அறிகுறிகள் இல்லாத கொவிட் தொற்று உள்ளான குழந்தைகளுக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அத்தகைய குழந்தைகளுக்கு முடிந்தவரை திரவ உணவையும் ஓய்வையும் கொடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்தகைய குழந்தைக்கு அதிக உடல் வெப்பநிலை இருந்தால், சரியான அளவு பரசிட்டமோல் கொடுத்து வைத்தியசாலையில் சேர்ப்பது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தற்போது பரவி வரும் டெங்கு காய்ச்சலில் இருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வைத்தியர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் பொது மயான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அடிக்கல்

மன்னார் நகர சபையால் ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலவில் பொது மயான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் நகர சபைத் தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் பொது மயான பகுதியில் இன்று (புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, அஞ்சலி மண்டபம், கிரியைகள் மண்டபம், நடைபாதைகளுக்கான கற்கள் பதித்தல், பிரார்த்தனை மண்டபதிருத்த வேலைகள் மற்றும் மலசலகூடங்கள் அமைப்பதற்கான அடிக்கற்கல் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொன்னம்பலம் சிறிவர்ணன், மன்னார் நகர சபை செயலாளர், கணக்காளர், மன்னார் நகர சபை உதவித் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு வேலைத்திட்டங்களுக்கான அடிக்கற்களை நாட்டி வைத்தனர்.

# சிறைக்கைதிகளுக்கு நாளை இரண்டாம் கட்டத் தடுப்பூசி




சினோபோர்ம் கொவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸை ஏற்கனவே பெற்ற கைதிகளுக்கு, இரண்டாவது டோஸை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக வெலிக்கடை சிறைச்சாலை 2,067 ஆண் கைதிகளுக்கும் 396 பெண் கைதிகளுக்கும் சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கொழும்பு விளக்கமறியல் சிறையில் 964 கைதிகளுக்கும், புதிய மகசின் சிறைச்சாலையில் 694 கைதிகளுக்கும் கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நாளை முதல் இரண்டாவது தடுப்பூசி டோஸ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 40 கர்ப்பிணித் தாய்மார் கொவிட்டால் உயிரிழப்பு

கொவிட் தொற்று உறுதியான 40 கர்ப்பிணித் தாய்மார்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

குடும்பநல சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் சமுதாய வைத்தியர் சித்ரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை 5 ஆயிரத்து 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இடைக்கால அரசாங்கத்தை அமைத்தனர் தலிபான்கள்

**தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசாங்கத்தினை அமைத்து அந்த நாட்டை இஸ்லாமிய எமிரேட்ஸ் என அறிவித்துள்ளனர்.**

ஐக்கியநாடுகள்சபையின்பயங்கரவாதிகளுக்கான கறுப்பு பட்டியலில் உள்ள முல்லாஹ் மொஹமட் ஹஸன் ஆப்கானிஸ்தானில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், தலிபான்களின் இணை நிறுவுனரான முல்லாஹ் அப்துல் கானி பரதர் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்க துருப்பினர்கள் கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

இதனையடுத்து, ஆப்கானிஸ்தானை தலிபான்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், அங்கு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அறிவித்தனர்.

எனினும், தலிபான்களின் ஆட்சியை விரும்பாத லட்சக்கணக்கான பொது மக்கள் ஆப்கானிஸ்தானில் விட்டு வெளியேறியிருந்தனர்.

இந்நிலையில், நாட்டின் பொருளாதாரம் மற்றும், சர்வதேச அங்கீகாரத்தினை பெறுவதில் புதிய இடைக்கால அரசாங்கம் பல சவால்களை எதிர்நோக்கும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

# வைத்தியசாலைக்குள் வெள்ளம் 17 நோயாளிகள் பரிதாப உயிரிழப்பு

மெக்ஸிக்கோவின் மத்திய ஹிடெல்கோ மாநிலத்தில் வைத்தியசாலைக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததால் ஏற்பட்ட அனர்த்தத்தில் 17 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலையின் சிகிச்சை அறையில் மருத்துவ பிராணவாயு வழங்கப்பட்டிருந்த கொரோனாத் தொற்று உறுதியான நோயாளர்களே இவ்வாறு உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு தொடர்ந்தும் பெய்த மழை காரணமாக நதி நீர் பெருக்கெடுத்து நகரில் உள்ள வைத்தியசாலையில் புகுந்தமை காரணமாக அங்கு மின் சாரமும் தடைப்பட்டுள்ளது.

அதேநேரம் வெள்ளத்தில் சிக்குண்ட மேலும் 40 நோயாளிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இதற்கிடையே, மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள மீட்புக் குழுக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக இராணுவமும் களமிறக்கப்பட்டுள்ளது.

# இந்தோனேஷிய சிறையில் தீ விபத்து; 41 பேர் சாவு



இந்தோனேஷியாவில் தலைநகர் ஜகார்த்தாவின் புறநகரில் உள்ள சிறைச்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

தங்கொராங் சிறையில் இன்று புதன்கிழமை அதிகாலை,பெரும்பாலான கைதிகள் உறங்கிக்கொண்டிருந்தபோது இந்த தீ விபத்து ஏற்பட்டது.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்த 122 கைதிகள் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த விபத்திற்கு மின்செயலிழப்பே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலிபான் அரசை அங்கீகரிப்பதில் அமெரிக்கா அவசரம் காட்டாது

## வெள்ளை மாளிகை



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தலைமையிலான புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அமையும் தலிபான்களின் இடைக்கால அரசில் முல்லா முகம்மது ஹசன் அகண்ட் தலைவராகவும், தலிபான் தலைவர் முல்லா பரதர், துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இருப்பார்.

வெளியுறவுத் துறை துணை மந்திரியாக ஷேர் முகம்மது அப்பாஸ் ஸ்டானிக் சாயும், உள்துறை மந்திரியாக சிராஜுதீன் ஹக்கானியும் இருப்பார்கள். பாதுகாப்பு மந்திரியாக முல்லா யாக்கூப் பதவி ஏற்பார் என்று தலிபான் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தானில் அமைக்கப்பட்டுள்ள தலிபான் தலைமையிலான புதிய அரசை அங்கீகரிப்பதில் அமெரிக்கா அவசரம் காட்டாது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜென் பெஸ்கி கூறுகையில், தலிபான்கள் அரசை அங்கீகரிப்பதில் எந்த அவசரமும் இல்லை. தலிபான்கள் எடுக்கும் நடவடிக்கையை பொறுத்து இந்த விவகாரத்தில் முடிவு எடுக்கப்படும். உலக நாடுகள் பார்த்து கொண்டிருக்கின்றன. அதேபோல் அமெரிக்காவும் தலிபான்கள் நடவடிக்கையை கண்காணிக்கும் என்றார்.



# தூங்கிய அதிகாரிகள்...! தப்பிய சிறைக் கைதிகள்...!

இஸ்ரேலிய நாட்டில் கில்போவா என்ற இடத்தில் அதி உயர் பாதுகாப்பு கொண்ட சிறைச்சாலையை இஸ்ரேல் அமைத்துள்ளது.

கடந்த இரு தினங்களுக்குள் இந்த சிறையில் இருந்து சுரங்கம் அமைத்து 6 பலஸ்தீன கைதிகள் தப்பிச் சென்றனர்.

கைதிகள் சுரங்கப் பாதையில் இருந்து சுற்றுச் சுவரைத் தாண்டி வெளியேறும் காட்சிகளுடன், அதனைக் கண்காணிக்கும் அதிகாரிகள் தூங்கியமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

# கொரோனாத் தடுப்பு விதிகளை மீறிய நபருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை

கொரோனாவை பெருமளவு கட்டுப்படுத்திய நாடுகளில் வியட்நாமும் ஒன்று. வியட்நாமில் கொரோனாத் தடுப்பு விதிமுறைகள்தீவிரமாககடைப்பிடிக்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில், அந்நாட்டில் கொரோனா தடுப்பு விதிகளை மீறிய நபருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.



வியட்நாமின் கமைவ் நகரை சேர்ந்த லி வென் டிரி என்ற 28 வயது நிரம்பிய நபர் 21 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்தல் விதியை மீறி ஹோ ஷி மின் ஹீ நகருக்கு சென்றுள்ளார். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்த லி வென் டிரி தனிமைப்படுத்தல் விதிகளை மீறி பயணம் செய்ததால் அவர் மூலம் 8 நபர்களுக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. அதில் ஒரு நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டார்.

இதையடுத்து, லி வென் டிரி மீது கொரோனாத் தடுப்பு விதிகளை மீறினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாக, கமைவ் நகரில் உள்ள நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணையில் லி வென் டிரி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதனால், கொரோனாத் தடுப்பு விதிகளை மீறிய குற்றத்திற்காக லி வென் டிரிக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



# கர்நாடகாவில் சந்தன மரக்கடத்தல் தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் கைது

**கர்நாடகாவில் சந்தன மரம் கடத்தினர் என தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன கர்நாடக மாநிலம் தும்கூர் மாவட்டம் குப்பி தாலுகாவில் கம்பள புரா - ஹரகலதேவி வனப்பகுதியில் சுமார் ஆயிரத்து 223 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப் பெரிய வனப்பகுதிகள் உள்ளன.**

ஹரகலதேவி வனப்பகுதியில் ஏராளமான சந் தன மரங்கள் இருக்கின்றமையை அறிந்த சந்தனமரக் கடத்தல் கும்பல், சந் தன மரங்களை வெட்டி கடத்தும் திட்டத்துடன் மலைப் பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

இது குறித்து தகவலறிந்த கர்நாடக மாநில வனத்துறை அதிகாரிகள் அவர்களைத் தேடியபோது தப்பி ஓட முனைந் தவர்களை துப்பாக்கிச் சூடு நடத்தி, மூவரைப் பிடித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த தமிழ்நாடு கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த மூர்த்தி (வயது 28), மல்லப்பா (வயது 58), கிருஷ்ணா (28) ஆகியோர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிகிச்சை முடிந்த பிறகு அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படும் என தும்கூர் மாவட்ட வனத்துறை அதிகாரி ரமேஷ் தெரிவித்தார்.

# பிரபல கவிஞர் புலமைப்பித்தன் உடல்நலக்குறைவால் காலமானார்





கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியரும் அ.தி.மு.க. முன்னாள் அவைத் தலைவருமான புலவர் புலமைப்பித்தன் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக சென்னை அடையாறில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த வாரம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் இன்று காலை தனது 86 ஆவது வயதில் அவர் காலமானார்.

கோவை மாவட்டம் பள்ளப் பாளையத்தில் 1935 ஆம் ஆண்டு பிறந்தவர் புலமைப்பித்தன். இவரது இயற்பெயர் ராமசாமி. நூற்பாலையில் பணிபுரிந்தபடியே தமிழ்ப் புலவர் படிப்பை நிறைவு செய்தார்.

1964 இல் திரைப்படங்களில் பாடல் எழுதுவதற்காக சென்னை வந்தார். சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார்.

குடியிருந்த கோவில் படத்தில் இடம் பெற்ற, 'நான் யார்' என்ற பாடல் வழியாக திரையுலகில் அவர் நுழைந்தார். அடிமைப் பெண் படத்தில் எழுதிய 'ஆயிரம் நிலவே வா' பாடல் மூலம், அனைவரின் கவனத்தையும் பெற்றார். எம்.ஜி.ஆரின் புகழ்பெற்ற பாடல்களில் ஒன்றான நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற என்ற பாடல் இவர் எழுதியதே.

'இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி', 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்', 'தெனாலிராமன்' ஆகிய வரலாற்றுப் பின்னணிப் படங்களுக்கு இவர்தான் பாடல்களை எழுதினார்.

தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியர் விருதை நான்கு முறை பெற்றிருக்கும் புலமைப்பித்தன், சட்டமேலவை உறுப்பினர் மற்றும் தமிழக அரசவைக் கவிஞர் ஆகிய பொறுப்புகளையும் வகித்திருக்கிறார்.

# ஆப்கான் பற்றி கவலைப்படும் இந்திய அரசு காஷ்மீர் மக்களின் உரிமைகளை மறுக்கிறது

## முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி பதிவு



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும் மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவருமான மெகபூபா முப்தி வெளியிட்ட டுவிட்டர் பதிவில், "ஆப்கானிஸ்தானில் உள்ள மக்களின் உரிமைகள் குறித்து இந்திய மத்திய அரசு கவலைப்படுகிறது. ஆனால், காஷ்மீர் மக்களின் உரிமைகளை வேண்டுமென்றே மறுக்கிறது. நான் இன்று வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளேன். காஷ்மீர் நிர்வாகத்தின் கருத்துப்படி காஷ்மீரில் இயல்பு நிலை இல்லை. இயல்பு நிலை இருப்பதாக கூறுவது அவர்களின் போலித்தனத்தை வெளிக்காட்டுகிறது எனப் பதிவிட்டுள்ளார்.

ஆனால், ஜம்மு காஷ்மீரில் பிரிவினைவாதத் தலைவர் சயத் அலி கிலானியின் மரணத்தையடுத்து வன்முறை வெடிக்கலாமென்ற அச்சத்தில் கொண்டுவரப்பட்ட பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிட்டன எனவும், சூழல் முழுமையாக இயல்புக்கு வந்து விட்டதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவினைவாதத் தலைவர் சயத் அலி கிலானியின் இறுதிச் சடங்கு குறித்து கருத்து தெரிவித்த மெகபூபா முப்தி, மறைந்த ஒருவரின் இறுதிச் சடங்கை நடத்த குடும்ப உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இங்கு குடும்ப உறுப்பினர்கள் இறுதிச் சடங்கை நடத்த அரசு அனுமதிக்கவில்லை. குறிப்பாக கிலானியின் குடும்ப உறுப்பினர்கள் தாக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்தியா மிகப்பெரிய தேசம், இது அதன் கலாச்சாரத்துக்கு எதிரானது எனத் தெரிவித்திருந்தார்.

# போதைக் கலாசாரத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கமல்ஹாசன் வேண்டுகோள்



தமிழகத்தில் நிலவும் போதைக் கலாசாரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசன் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

சமீபத்திய சாலை விபத்துக்களில் இளைஞர்கள் பலியான கோரச் சம்பவங்கள் பதறவைக்கின்றன. போதையே காரணம் என்கிறார்கள். தமிழகத்தில் தலைதூக்கியிருக்கும் இந்த போதைக் கலாசாரத்தைக் கட்டுக்குள் கொண்டுவர தமிழக முதலமைச்சர் உடனடிச் செயல்பாட்டில் இறங்க வேண்டும், என்று அவர் தனது பதிவில் கேட்டுக்கொண்டுள்ளார்.



# விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டங்களுக்கு பெங்களூரில் 3 நாள்களுக்கு மட்டுமே அனுமதி

கர்நாடக அரசு 5 நாள்களுக்கு விநாயகர் சதுர்த்தி விழாக்களை நடத்த அனுமதித்துள்ள நிலையில் கொரோனாப் பாதிப்புகள் காரணமாக பெங்களூருவில், பொது இடங்களில் மூன்று நாள்கள் மட்டுமே விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டங்களை நடத்த மாநகராட்சி நிர்வாகம் அனுமதித்துள்ளது. இது தொடர்பாகத் தகவல் வழங்கிய பிரகத் பெங்களூரு மஹாநகர பலிகே (பி.பி.எம்.பி) தலைமை ஆணையர் கவுரவ் குப்தா, பெங்களூரு நகரில் மூன்று நாள்களுக்கு மேல் விநாயகர் திருவிழா கொண்டாட அனுமதிக்கப்படாது. சிலையைக் கொண்டு வரும்போது அல்லது மூழ்கச்செய்யும் விழாவின்போது எந்த ஊர்வலமும் நடத்தப்படக்கூடாது, என்று வலியுறுத்தியிருக்கிறார்

செயற்கைக் களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் தடை செய்யப்பட்டுள்ளன. வீடுகளில் நிறுவப்பட்ட சிலைகள் வீட்டில் அல்லது தங்களது நடமாடும் தண்ணீர் தாங்கிகளில் கரைக்க வேண்டும். பொது இடங்களில் நிறுவப்படும் விநாயகர்கள் அதிகபட்சம் நான்கு அடி உயரத்தில் இருக்க வேண்டும். அவற்றையும் நமது நடமாடும் தண்ணீர் தாங்கிகளில்தான் கரைக்க வேண்டும். நாங்கள் இதற்கான சிறப்புத் தொட்டிகளை ஆங்காங்கே நிறுவுகிறோம். அவற்றையும் பயன்படுத்திக் கொள் ளலாம். ஏரிகளில் சிலைகளை மூழ்கடிப்பதைத் தடை செய்துள்ளோம். கடந்த ஆண்டும் பெங்களூருவில் விநாயகர் சதுர்த்தி திருவிழா மூன்று நாள்களுக்கே அனுமதிக்கப்பட்டது. அது இந்த ஆண்டும் தொடரும், என்றும் குப்தா தெரவித்திருக்கிறார்.



# அத்தியாவசிய சேவை லொறியில் சம்மாந்துறையில் உரம் கடத்தல்

**50 மூடைகள் யூரியா உள்ளிட்ட 350 உர மூடைகளை அத்தியாவசிய சேவைகள் என்ற பெயர் பலகை இடப்பட்ட லொறி ஒன்றில் கடத்திய இருவரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்**

நேற்று மாலை அம்பாறை பொலிஸ் விசேட பிரிவின் புலனாய்வு தகவலுக்கமைய சம்மாந்துறை பொலிஸார் பசளைகளை கடத்தி சென்ற இருவரை கைது செய்ததுடன் லொறியுடனான 350 உர மூடைகளையும் மீட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பல்லேகம பிரதேசத்தில் இருந்து அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்திற்கு எடுத்து செல்லப்பட்ட 350 உர மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் போது லொறியில் பயணம் செய்த சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் 350 உர மூடைகளையும் லொறியையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட யூரியா உள்ளிட்ட உர வகைகள், லொறி மற்றும் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூர் திகிலிவெட்டை வாவியூடாக தோணிகளினூடு கடத்தப்பட்ட கசிப்பு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள திகிலிவெட்டை பிரதேசதத்தில் வாவி ஊடாக தோணிகளில் மொரக்கொட்டாஞ்சேனை பிரதேசத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்துள்ளதுடன் ஒருவர் தப்பி ஓடியுள்ளார் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தெரிவித்தார்.



மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.கே. பண்டார தலைமையிலான பொலிஸார் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு மொரக்கொட்டாஞ்சேனை வாவி பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். இதனபோது வாவியில் தோணிகள் இரண்டில் இருவர் கசிப்புக்களை கொண்டு வந்து கரை ஒதுங்கியபோது அவர்களை பொலிஸார் மடக்கிப்பிடித்தனர். இதன்போது ஒருவர் தப்பியோடியுள்ளார் எனவும் ஒருவரை 80 லீற்றர் கசிப்புடன் கைது செய்துள்ளதுடன் இரண்டு தோணிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

# கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு இலங்கை இராணுவத்தினர் உதவி

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் 231 படைப்பிரிவின் பிரிகேடியர் கேர்ணல் துலிப் பண்டார, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீரிடம் ஒட்சிசன் கருவி மற்றும் அதனோடு தொடர்புடைய கருவிகளையும் கையளித்தார்.

இந்த நிகழ்வு காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.குருக்கள் மடம் இராணுவ முகாம் இணைப்பதிகாரி ஏ.எம்.டயபிள்யு.உதயகுமார மேஜர் வை. எம்.யு.வி.யாப்பா, கப்டன் அத்துக்கோரல, இராணு சிவில் பாதுகாப்பு அதிகாரி உட்பட வைத்தியசாலை அதிகாரிகள், தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி ஆதார வைத்தியசாலை தொடர்பாகவும் கொவிட் சிகிச்சை நிலையம் தொடர்பாக மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் 231 படைப்பிரிவின் பிரிகேடியர் கேர்ணல் துலிப் பண்டார காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம். ஜாபீரிடம் கேட்டறிந்து கொண்டார்.

# 1,720 கிலோ கிராம் தார் பூசணிக்காயை ஏற்றிவந்த லொறி விபத்துக்குள்ளானது

கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் நேற்று இரவு 07.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவரும் அதிஷ்டவசமாக தப்பிக்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட ஓட்டமாவடி பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்றை நோக்கி ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள 1,720 கிலோ கிராம் தார் பூசணிக்காயை ஏற்றிக்கொண்டு வந்த லொறியே இந்த விபத்தில் சிக்கியது. பின்பக்க டயர் வெடித்தமையே விபத்துக்கான காரணம் என அறியப்பட்டுள்ளது.

அவ்விடத்திற்குவிரைந்த கல்முனை போக்குவரத்து பொலிஸார் வாகனப் போக்குவரத்தை நிறுத்தி பிரதேச மக்கள் மற்றும் வீதிப்பயணிகளின் உதவியுடன் கவிழ்ந்து கிடந்த லொறியே நிமிர்த்தினர். சுமார் 20 நிமிடம் அளவில் வேகமாக செயற்பட்ட பிரதேசவாசிகள் குறித்த லொறியையும், வீதியில் விழுந்து கிடந்த தார் பூசணியையும் மீட்டனர். இருந்த போதிலும் சுமார் 200 கிலோ அளவில் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொருள்கள் பதுக்கப்படுகின்றமை; மாநகரசபையூடாகவும் சோதனை



பொருள்கள் பதுக்கல்கள் தொடர்பில் மிக விரைவில் மாநகரசபையூடாகவும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அது மட்டுமல்லாது, சுகாதாரப்பிரிவினர், நுகர்வோர் அதிகாரசபை, விலை மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து குழு சோதனை நடவடிக்கை ஒன்றினையும் திட்டமிட்டுள்ளோம் என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

இன்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில், மாநகரசபையில் பலருக்குக் கொவிட் தொற்று ஏற்பட்டமையினால் மாநகர சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. உண்மையில் எமது மண்டபத்தில் நிகழ்வொன்று இடம்பெற்றது. அதன் பின்னர் தான் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டார்கள். அதனை நான் நடாத்த வேண்டாம் என ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தேன். ஆனால் அது செய்யப்பட்டது. அதன் பின்னர் தான் மாநகரசபையில் தொற்று ஆரம்பித்தது. சுமார் 35 பேர் வரையில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டார்கள். தற்போது தொற்று நீக்கப்பட்டு எமது சேவைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் பொது மக்கள் மிக விழிப்பாக தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது சுகாதார சுற்று நிருபம் என்பது ஆளுங்கட்சியினரைப் பொறுத்த வரையில் பின்பற்றப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியான விடயம். ஆளுங்கட்சியின் அரசியற் பிரமுகர்கள் பல நிகழ்வுகளைச் செய்கின்றார்கள். அதற்குரிய நடவடிக்கைகளைக் கொவிட் செயலணி தான் எடுக்க வேண்டும்.

தற்போது இடம்பெறுகின்ற பொருள்களின் பதுக்கல்கள் தொடர்பில் எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி வருகின்றோம். மிக விரைவில் மாநகரசபையூடாகவும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அது மட்டுமல்லாது, சுகாதாரப் பிரிவினர், நுகர்வோர் அதிகாரசபை, விலை மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து குழு சோதனை நடவடிக்கை ஒன்றினையும் திட்டமிட்டுள்ளோம்.

தற்போதைய நிலையில் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தடுப்பூசி ஒன்றே ஒரே ஒரு வழியாக இருக்கின்றது. அனைவரும் தவறாது தடுப்பூசி போட வேண்டும். தடுப்பூசியின் வகை தொடர்பில் பார்க்காமல் அந்த அந்த மாவட்டங்களுக்குக் கிடைக்கும் தடுப்பூசி வகைகளை செலுத்திக் கொள்ள வேண்டும். எனவே அனைவரும் இரண்டு தடுப்பூசிகளையும் தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

# கிழக்கில் 12 ஆதார வைத்தியசாலைகளிலும் உயர் நிலை அவதானிப்புப் பிரிவு ஆரம்பிப்பு

கிழக்கு மாகாண கொவிட் நிலைமையைக்கருத்திற் கொண்டு மாகாணத்திலுள்ள 12 ஆதாரவைத்தியசாலைகளிலும் அதிதீவிரசிகிச்சை பிரிவுக்கு மேலதிகமாக உயர் நிலை அவதானிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

இப் புதிய பிரிவில் மிகவும் பாதுகாப்பாக நோயாளிகள் பராமரிக்கப்படுகின்ற அதேவேளை சுகாதாரத்துறையினரும் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படுவர். சாதாரண விடுதி சிகிச்சைக்கும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கும் இடைப்பட்ட ஒன்றாக அமையும். இங்கு நோயாளிகள் 24மணிநேரமும் ஏனையோரில் தங்கிருப்பதால் பராமரிப்பு தொடர்ச்சியாகவிருக்கும்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, நிந்தவூர், பொத்துவில், திருக்கோவில் போன்ற ஆதாரவைத்தியசாலைகளில் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, கொரோனாவுக்கான அதிதீவிர சிகிச்சைப் பிரிவு காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி வாழைச்சேனை போன்ற ஆதாரவைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற காரணங்களினால் கிழக்கில் கொரோனாத் தொற்று வீதமும் மரண வீதமும் படிப்படியாக குறைந்து வருகின்றன. தடுப்பூசிகள் வேகமாக ஏற்றப்பட்டுவருவதனாலும் மரணவீதம் குறைந்துவருவதை அவதானிக்க முடிகிறது. இறுதியாக இரண்டாவது டோஸ் ஏற்றியவர்களுக்கு அடுத்த 3 வாரங்களின்பின்னரே அது வேலை செய்ய ஆரம்பிக்கும். எனவே ஊசிபோட்டுவிட்டோமென்று அலட்சியமாக கவனயீனமாக இருக்கவேண்டாம். சுகாதாரநடைமுறைகளை அனைவரும் தொடர்ச்சியாக பின்பற்றவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது இலங்கை

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலானமூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 78 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சரித் அசலங்க 47 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதையடுத்து 204 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, இலங்கை அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாது 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற, இலங்கை அணி 78 ஓட்டங்களால் இந்தப் போட்டியையும் தொடரையும் வென்றது. இந்த வெற்றியின்மூலம்தென்னாபிரிக்க அணிக்குஎதிரானமூன்றுபோட்டிகளைக் கொண்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரை இலங்கை அணி 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் இலங்கை அணி கைப்பற்றும் ஒருநாள் தொடராக இது அமைந்துள்ளது.

தென்னாபிரிக்க அணியின் ஹென்ரிச் க்ளாசன் அதிகபட்சமாக 22 ஓட்டங்களை எடுத்தார். இலங்கை அணியின் அறிமுகவீரரான மகீஷ் தீக்ஷன 4 விக்கெட்டுகளையும் ஹசரங்க, துஷ்மந்த சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். போட்டின் நாயகனாக துஷ்மந்த சமீரவும் தொடரின் சிறப்பாட்டக்காரராக சரித் அசலங்கவும் தெரிவானார்கள்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



# அமெரிக்க ஓபன் டென்னிஸ் மகளிர் பிரிவு அரையிறுதிக்கு முன்னேறிய 19 வயது லேலா

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பதின்ம வயது வீராங்கனையானலேலாபெர்ணான்டஸ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் காலிறுதி ஆட்டத்தில் கனடாவின் 19 வயதான லேலா பெர்ணான்டஸ், உலக தரவரிசையில் 5 ஆவது இடத்தில் இருக்கும் உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விடோலினாவை எதிர்கொண்டார். அதிரடியாக விளையாடிய லேலா 6-3, 3-6, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். முன்னதாக அவர், நடப்பு சம்பியன் நவோமி ஓசாகா, ஏஞ்சலிக் கெர்பர் ஆகியோரையும் வீழ்த்தியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

மற்றொரு காலிறுதிப்போட்டியில் கிரேக்க வீராங்கனை பார்போரா கிரெஜகோவி, பெலாரஷ்ய வீராங்கனை அரினா சபலென்காவை எதிர்கொண்டார். இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய அரினா சபலென்கா 6-1, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

# மூன்றாவது முறையாக அமெரிக்க ஓபனில் அரையிறுதிக்குள் நுழைந்தார் மெட்வடேவ்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் மெட்வடேவ் அரையிறுதிக்குள் நுழைந்திருக்கிறார்.

தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள மெட்வடேவ், நெதர்லாந்தின் போடிக் சான்ட்ஸ்கல்ப்பை எதிர் கொண்டார். முதல் இரு செட்களைக் கைப்பற்றிய மெட்வடேவ், மூன்றாவது செட்டை இழந்தார். எனினும் சுதாகரித்த அவர் நான்காவது செட்டைக் கைப்பற்றி, 6-3, 6-0, 4-6, 7-5 என்ற செட்களில் போட்டியை வென்று தொடர்ந்து மூன்றாவது முறையாக அமெரிக்க ஓபனில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

வரும் பதினோராம் திகதி நடைபெறவுள்ள அரையிறுதிப்போட்டியில் அவர் கனடாவின் 21 வயது வீரர் ஃபீலிக்ஸ் அலியசிம்மோடு மோதவிருக்கிறார்.

# கால்பந்து ஜாம்பவான் பீலேயிற்கு சத்திரசிகிச்சை நடைபெற்றது



கால்பந்து ஜாம்பவானான பீலே உலகக் கிண்ணத்தை வென்ற பிரேஸில் கால்பந்தாட்ட அணியில் 3 முறை இடம்பிடித்தவர். 80 வயதான பீலே, சாபாலோவில் உள்ள மருத்துவமனையில் கடந்த வாரம் மருத்துவப் பரிசோதனை செய்துகொண்டபோது, அவருக்குக் குடல் பகுதியில் ஒரு கட்டி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து அவருக்கு சத்திர சிகிச்சை மூலம் அந்தக் கட்டி அகற்றப்பட்டது. தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் அவர் நல்ல உடல் நிலையுடன் இருக்கிறார் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# இறுதி டெஸ்ட்டுக்கான அணியில் ஜோஸ் பட்லர், ஜக் லீச் இணைப்பு

இந்திய அணிக்கு எதிரான ஐந்தாவதும் தொடரின் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு ஜோஸ் பட்லர், ஜக் லீச் ஆகியோர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் மன்செஸ்டரில் தொடங்கவுள்ளது.

தொடரில் 1-2 என்று பின்தங்கியுள்ள இங்கிலாந்து அணி, தொடரை சமன் செய்ய கடைசி டெஸ்டில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் உள்ளது.

இந்தப் போட்டிக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்ததால் நான்காவது டெஸ்டில் விடுவிக்கப்பட்ட விக்கெட் காப்பாளர் ஜோஸ் பட்லர் அணிக்குத் திரும்பியுள்ளார்.

அந்தத் தம்பதிக்கு சில தினங்களுக்கு முன்பு பெண் குழந்தை பிறந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே போல் சுழல்பந்து வீச்சாளர் ஜக் லீச்சும் அணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

வேகப்பந்து வீச்சாளர்கள் ஜேம்ஸ் அன்டர்சன், கிரேக் ஓவர்டொன் இருவரும் சிறுசிறு காயங்களால் அவதிப்பட்ட போதிலும் அணியில் நீடிக்கிறார்கள்.

இங்கிலாந்து அணி விவரம் - ஜோ ரூட் (அணித்தலைவர்), மொயீன் அலி, ஜேம்ஸ் அன்டர்சன், பெயர்ஸ்டோ, ரோரி பேர்ன்ஸ், ஜோஸ் பட்லர், சாம் கரன், ஹசீப் ஹமீட், டான் லோரன்ஸ், ஜக் லீச், டேவிட் மலன், கிரேக் ஓவர்டொன், ஒலி போப், ஒலி ரொபின்சன், கிறிஸ் வோக்ஸ், மார்க்வுட்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கை கடற்பரப்பில் இருக்கும் பொக்கிஷம்!

## அமைச்சர் வெளியிட்ட தகவல்



மன்னார் கடற்பரப்பிலுள்ள 26,700 கோடி பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தால் நாட்டின் மொத்தக்கடன்தொகையை போன்று மூன்று மடங்கு வருமானம் ஈட்ட முடியும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை மேற்கொள்ளும் முதலீட்டாளர்களுக்கு 50 வீதத்தை வழங்கினாலும் 13,350 கோடி டொலர் அரசுக்கு கிடைக்கும் எனவும், அது நாட்டின் மொத்த கடன் தொகையான 4,700 கோடி டொலரை விட மூன்று மடங்காகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாம் மதிப்பீட்டுக்காக முன்வைக்கப்படவுள்ள கனியவளங்கள் சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டமையுடன் இந்த சட்டமூலத்துக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அனுமதியும் வழங்கப்பட்டது.

இலங்கை கனிய வளங்கள் அதிகார சபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட கனிய வளங்கள் ஆய்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் அந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்தும் நோக்கிலான இந்த சட்டமூலத்தை அரசின் முக்கிய விடயமொன்றாக கருதி நாடாளுமன்றத்துக்கு முன்வைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மன்னார் கடற்பரப்பிலுள்ள எரிவாயுவால் மாத்திரம் நுரைச்சோலை மின்சக்தி நிலையத்தை 120 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும் எனவும், அங்கு காணப்படும் எண்ணெயின் மூலம்சப்புகஸ்கந்தஎண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 143 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும் எனவும் அமைச்சர் கம்மன்பில இதன்போது குறிப்பிட்டார்.

எமது அண்டைய நாடான இந்தியா 1940 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு அண்மித்த கடலிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வில் ஈடுபட்டதுடன், பல்வேறு விடயங்கள் காரணமாக இலங்கைக்கு அதனை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாகவும், இது தொடர்பில் நிபுணர்கள் மத்தியில் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலை அடுத்து இதற்கான பல காரணங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கையில் எண்ணெய் ஆய்வுக்காக உலகிலுள்ள பாரிய நிறுவனங்கள் முன்வரவில்லை எனவும் அதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு முன்னர் இது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும்போது, இந்தத் துறையில் அதிகாரிகளுக்கு காணப்பட்ட நிபுணத்துவம் குறைவு என்பதால், கனிய வளங்கள் அதிகார சபையை ஸ்தாபிப்பதன் மூலம் நிபுணர்களுக்கு இந்தப் பணியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதேபோன்று, கடந்த காலங்களில் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது உள்ளிட்ட ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அமைச்சரவையை மையப்படுத்திக் காணப்பட்டதால் அமைச்சர்கள் மாறும் போது அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்பட்டது.

இதனால் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து அதிகாரங்களையும் இந்த அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு வழங்க நாம் நடவ டிக்கை எடுத்தோம். அதேபோன்று, பழைமையான வரைபடங்களுக்குப் பதிலாக எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வுக்குநவீனவரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று, பல மில்லியன் டொலர்கள் இதற்கு முதலிட வேண்டும் எனவும் இந்தப் பாரிய முதலீடுகளைப் பாதுகாக்கத் தேவையான பலம் வாய்ந்த நீதிக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதும், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் விசேட குழுவொன்று நியமிக்கப்படுவதும் இந்த சட்டமூலத்தின் ஊடாக இடம்பெறுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பொதுவாக உலகில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வின் போது ஒரு நாட்டில் ஏழு கிணறுகள் அகழ்வு செய்யும் போது ஒன்று வெற்றிபெறுவதாகவும், நோர்வே நாட்டுக்கு முதலாவது வெற்றியடைவதற்கு 31 கிணறுகள் அகழ்வு செய்ய வேண்டி ஏற்பட்டதாகவும், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 4 கிணறுகள் அகழ்வின் போதும் 3 கிணறுகள் வெற்றியடைந்தமை நல்லதொரு நிலைமை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கைகளுக்காக உலகம் பூராகவும் உள்ள துறைசார்ந்த இலங்கை நிபுணர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இலங்கை செல்வதை தவிர்க்குக! அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

கொவிட் -19 வழக்குகள் அதிகரித்து வருகின்றமையால், இலங்கை, ஜமைக்கா மற்றும் புருனே ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு அமெரிக்க மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி குறித்த நாடுகள் அதிக ஆபத்தான நிலை 4 இல் வகைப்படுத்தப்பட்டுள்ளன எனவும், ஆகையால் இந்த நாடுகளுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் கூறியுள்ளது.

நெதர்லாந்து, மால்டா, கினியா-பிசாவ் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவற்றுக்கான மதிப்பீடுகளை 'நிலை 4 இல் இருந்து 'நிலை 3 இற்கு தளர்த்தப்பட்டுள்ளது. எனினும், தடுப்பூசி போடப்படாத அமெரிக்கர்களை அந்த இடங்களுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா 'Level 1: Low இலிருந்து Level 2: ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அங்குவிலா, ஆன்டிகுவா மற்றும் பார்புடா, பெனின், கானா, கிரெனடா, துருக்கி மற்றும் கைகோஸ் தீவுகளுக்கான ஆலோசனை நிலைகள் 'நிலை 3.' இற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

# 80 பிரபலங்கள் கொவிட்டால் சாவு!

## சுகாதார அதிகாரிகள் தகவல்

இலங்கையில் தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், பிரபுக்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட பிரபலமான 80 இற்கும் மேற்பட்ட முக்கிய நபர்கள் கொவிட் நோய்த்தொற்றால் உயிரிழந்துள்ளார்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் பாடகர்கள், நடிகர்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 300 இற்கும் அதிகமான நபர்கள் இதுவரையில் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கொவிட் தொற்றுக்குள்ளாகிய அமைச்சர் உறுப்பினர்களின் எண்ணிக்கை 27 ஆகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட்தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த முக்கிய பிரமுகர்களில் முன்னாள் அமைச்சரான மங்கள சமரவீர, முன்னாள் சபாநாயகர் வி.ஜ.மு.லொக்குபண்டார, சைட்டம் பல்கலைக்கழகத்தின் பிரதானி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நெவில் பெர்னாண்டோ, கப்பிட்டல் மாராஜா குழுமத்தின்தலைவர்ஆர்ராஜமஹேந்திரன், ஜிப்ஸிஸ் இசை குழுவின் தலைவர் சுனில் பெரேரா, இராணுவ பிரிகேடியர் எஸ்.டீ.உதயசேன, விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர், மேல் மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் டக்ளஸ் பெர்னாண்டோ, ராகம வைத்தியசாலை வைத்தியர் கயான் தன்தநாராயன, சட்டத்தரணிகள் நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராஜா ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

# சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்க கொவிட்டை காரணமாக கருதமுடியாது

## மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு

காவலில் உள்ள சந்தேக நபருக்கு பிணை வழங்குவதற்கான சிறப்பு காரணியாக கொவிட் தொற்று நோய் சூழ்நிலையைக் கருத முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபர் ஒருவர் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட மறுசீராய்வு விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

67 கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில், குறித்த நபர் கடந்த ஆண்டு சிலாபத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், கொவிட் வைரஸ் பரவலின் அபாயங்களின் அடிப்படையில் சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது. எனினும், மேல்முறையீட்டு நீதிமன்றம் தற்போதைய தொற்றுநோய் நிலைமை அனைத்து கைதிகளுக்கும் பொதுவானது என்றும் பிணை வழங்குவதற்கு இதனை விதிவிலக்கான சூழ்நிலையாகக் கருத முடியாது என்றும் தீர்ப்பளித்துள்ளது.

# தொழில்நுட்ப பூங்காக்களை நாட்டில் அமைக்கத் திட்டம்

2021 வரவு - செலவு திட்டத்தின் மூலம் காலி, குருநாகல், அநுராதபுரம், கண்டி மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 05 தொழில்நுட்ப பூங்காக்களை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலைக்கு அணுகக் கூடிய வசதிகள், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய, தேவையான மனித வளத்துடன் கூடியதும் ஏனைய இதர சேவைகளைக் கருத்தில் கொண்டு குறித்த தொழிநுட்பப் பூங்காக்களை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் தொழில்நுட்ப அமைச்சால் அடையாளங் காணப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை வணிக ரீதியான தொழில் முயற்சிகளாக நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமான வகையில் திறைசேரி செயலாளருக்கு ஒட்டு மொத்த பங்குரிமை உரித்தாகும் வகையில் தொழிநுட்ப பூங்காக்கள் அபிவிருத்திக் கம்பனி எனும் பெயரிலான கம்பனியை நிறுவுவதற்கும், எதிர்வரும் காலங்களில் குறித்த கம்பனியை கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு செய்து தனியார் துறை முதலீட்டாளர்களுக்கு குறித்த கருத்திட்டத்தில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2021இல் வெளியிடப்பெற்றது.